இறுதியாண்டுத் தேர்வு தமிழ் மொழி 2-12-2006
வகுப்பு 06

**பன்முகதேர்வு வினாக்கள்; Section A வருடம்: 06**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வெண்ணிறம் என்பதைப் பிரித்து எழுதினால் -----------<br>1. வெ + நிறம் 2. வெண் + நிறம் 3. வெள்ளி + நிறம் 4. வெள்ளை+நிறம் | 1 | 2 | 3 | 4 |
| 2. | அது மெதுவாக நடந்து -----------<br>1. செல் 2. செல்கிறாள். 3. சென்றன. 4. சென்றது | 1 | 2 | 3 | 4 |
| 3. | நல்லவன் எதிர்பால் சொல் ---------<br>1. நல்லது 2. நல்லவள் 3. நல்ல. 4. கெட்டவள் | 1 | 2 | 3 | 4 |
| 4. | ஆசிரியர் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தார். இதில் பயனிலை<br>1. கல்வி 2. பிள்ளைகளுக்கு 3. ஆசிரியர் 4. கற்பித்தார். | 1 | 2 | 3 | 4 |
| 5. | ----------- தாய் பேண்.<br>1.தந்தை 2. அக்கா 3. அன்னையும் 4. அப்பாவும் | 1 | 2 | 3 | 4 |
| 6. | சிறிய என்பதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. விருப்பு 2. பழைய 3. பெரிய 4. செயற்கை | 1 | 2 | 3 | 4 |
| 7. | கணவன் எதிர்பால் சொல் ---------------.<br>1. மனைவி 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8. | நாங்கள் எல்லோரும் பாட்டு<br>1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | கல்யாணம் என்பதன் ஒத்த சொல் -----------.<br>1. கொண்டாட்டம் 2. வணக்கம் 3. திருமணம் 4. கலைவிழா | 1 | 2 | 3 | 4 |
| 10. | ஆண்டுகள் என்பது ---------------.<br>1. மாதா 2. வருடங்கள் 3. தம்பி 4. வருடம் | 1 | 2 | 3 | 4 |
| 11. | மாமா சற்றுமுன் ஒரு கதை ----------<br>1. சொல்கிறார் 2. சொல்வார்3. சொல் 4. சொன்னார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | இளமையில் ---------- சிலையில் எழுத்து<br>1. அழகு 2. கல்வி 3. எழுத்தும் 4. அழகு | 1 | 2 | 3 | 4 |
| 13. | விண் என்பதன் ஒத்த சொல் ------------.<br>1. எண் 2. வானம் 3. முகில் 4. எண்கள் | 1 | 2 | 3 | 4 |
| 14. | சோம்பல் இதன் எதிர்ச்சொல் -------------.<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4. சுறுசுறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 15. | பழங்களை குலையாக தரும் மரம் -------------.<br>1. தென்னை 2. வாழை 3. பூமரம் 4. மாமரம் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | ------------ கவிதை ஒன்று படிக்கிறோம்.<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் பெரிய நாய் என்னை பார்த்து -----------<br>1. குரைத்து 2. குரைத்தது 3. குரைத்த. 4. குரை. | 1 | 2 | 3 | 4 |
| 18. | வருடம் முடிவது எந்த மாதத்தில்?<br>1. தை 2. மார்கழி 3. மாசி 4. ஆடி | 1 | 2 | 3 | 4 |
| 19. | பண்டிதன் எதிர்ப்பால் சொல் ------------.<br>1. தலைவி 2. சகோதரி 3. பண்டிதை 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | தெய்வத்தின் மறுபெயர்<br>1. கடவுள் 2. பிள்ளை 3. ராமன் 4. காற்று | 1 | 2 | 3 | 4 |
| 21. | விளக்கின் ------------- பிரகாசமாக இருந்தது.<br>1. ஒலி 2. ஒளி 3. ஒழி 4. ஓலி | 1 | 2 | 3 | 4 |
| 22. | புகை மண்டலம் கண்ணை --------------.<br>1.மரைத்தது 2.மறைத்தது 3.மறுத்தது 4. முரைத்தது | 1 | 2 | 3 | 4 |
| 23. | அவள் தன் கடமைகளை ----------------<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தாள். | 1 | 2 | 3 | 4 |
| 24. | COUNTRY என்பது --------------.<br>1. கிராமம் 2. நாடு 3. பட்டணம் 4. வீடு | 1 | 2 | 3 | 4 |
| 25. | ஐம்பத்திநான்குக்கு அடுத்த எண் ---------------.<br>1. 56 2. 20 3. 51 4. 55 | 1 | 2 | 3 | 4 |
| 26. | கேள்விகளை வாசித்து --------- எழுதுக.<br>1. கேள்வி 2. விடை 3. பேச்சு 4. பதில் | 1 | 2 | 3 | 4 |
| 27. | நல்ல புத்தகங்களை படிக்கவும்.. புத்தகங்களுக்கு ஒத்த சொல் -----------.<br>1 .நூல்கள் 2. பாடங்களை 3. புத்தகங்களை 4. நாவல்களை | 1 | 2 | 3 | 4 |
| 28. | நான் நாளை பாடசாலைக்கு --------------<br>1. வந்தோம் 2. வருகிறோம் 3. வருவோம் 4. வருவேன் | 1 | 2 | 3 | 4 |
| 29. | ------------------ நேற்று சென்றார்கள்.<br>1. அது 2. அவை 3. அவர்கள் 4. அவன் | 1 | 2 | 3 | 4 |
| 30. | கடலில் ------- அதிகமாக உள்ளது.<br>1. அழை 2. அலை 3. ஆழை 4.அளை | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

**வினாக்கள்** **வருடம்: 06**

**1.பின்வரும் பந்தியை வாசித்து, கீழ்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

எந்த பூச்சிகளைக் காட்டிலும் மனிதனுக்கு அதிக தீங்கு விளைவிப்பது நுளம்புகளாகும். உலகமெங்கும் பொதுவாக நுளம்புகள் காணப்படுகின்றன. மிகவும் சிறியதான இந்த நுளம்புகளில் பல வகைகள் உண்டு. இவற்றில் சில இனங்களால் பல நோய்கள் பரவுகின்றன. உதாரணமாக மலேரியாக் காய்ச்சல் யானைக்கால் நோய், டிங்குக் காய்ச்சல், மஞ்சள் நோய்க் காய்ச்சல் என பல நோய்கள் உண்டு. தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் இவை பெருகின்றன. ஒரு தடவையிலே பல ஆயிரக்கணக்கில் முட்டைகள் இட்டுப் பெருகின்றன. மற்றைய பூச்சியினங்களைப் போன்று இதற்கும் முட்டை, புழு கூட்டுப்புழு முதிர் பருவம் என நான்கு நிலைகள் உண்டு. இவற்றின் ஆயுள் மிகச் சொற்பமே. மரச்சாறு பழரசம் போன்றவற்றை ஆண் நுளம்பு உறிஞ்சி உண்ணும். ஆனால் பெண் நுளம்பு இரத்தத்தை குடித்து வளரும். இதன் ஊசி போன்ற மெல்லிய உறுப்பினால் தோலை குத்தி நம் இரத்தத்தில் தன் உமிழ் நீரை செலுத்தி இரத்தத்தை உறிஞ்சுகின்றது. அந்த உமிழ் நீரிலுள்ள கிருமிகளே நோய்களுக்கு காரணம் ஆகும். நுளம்புகளை கட்டுப்படுத்த அவை உற்பத்தியாகும் இடங்களில் மருந்துகளை தெழித்தும் தண்ணீர் தேங்கவிடாமல் செய்தும் சுற்றுப் புறங்களை சுத்தமாக வைத்துக் கொண்டாலும் இவை பரவாமல் தடுக்கலாம்.

மனிதனுக்கு அதிக தீங்கு விளைவிக்கும் பூச்சியினம் எது?

________________________________________

நுளம்புகளால் பரவும் நோய்கள் எவை?

________________________________________

இவை எங்கிருந்து பெருகுகின்றன?

________________________________________

நுளம்பின் வாழ்க்கை பருவங்கள் எவை?

________________________________________

இவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

________________________________________

(10 புள்ளிகள்)

**2. நீர் உமது குடும்பத்தினருடன் விடுமுறைக்கு கனடாவுக்கு சென்றிருந்தபோது உமது நண்பருக்கு அந்நாட்டைப் பற்றி அங்கு பார்த்தவற்றை பற்றி ஒரு கடிதம் எழுதுக.**

(10 புள்ளிகள்)

**3. மாறிக்கிடக்கும் சொற்களைக் கருத்தமைய மாற்றி சரியான வசனத்தில் அமைக்க.**

நல்ல - புத்தகங்கள் - நல்ல - தருகின்றன - அறிவை

வகுப்பறைகளிலும் - எல்லா - இருக்கின்றன - கணிணிகள்

கட்டி - வீடு - மணல் - விளையாடினார்கள் - சிறுவர்கள்

எழுதி - படித்துக் - மாணவர்கள் - கொண்டிருந்தார்கள்.

பெரிய - வீட்டின் - வாகனம் - நிறுத்தப்பட்டிருந்தது - முன்னால்

(10 புள்ளிகள்)

4. கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.

(ரசித்தார்கள், சென்றான், விபத்து, வீதியில், குழந்தை, ஓவியத்தை, பிரிவு, நண்பர்களை, புகைவண்டி, போகிறார்கள்)

என் தம்பி சென்றவாரம் கோவிலுக்கு ______________.

அவர்கள் சுற்றுலாவுக்கு நாளை ___________

அவர்கள் என் பாட்டை கேட்டு __________.

ராமன் வரைந்த _________ அனைவரும் ரசித்தனர்.

நான் பார்த்த _________ என்னைத் திடுக்கிட வைத்தது.

அந்த வாகனம் __________ விரைவாக சென்றது.

அந்தச் சிறு __________ நீண்ட நேரம் தூங்கி எழுந்தது.

___________ மிகவும் மெதுவாக சென்றது.

உறவு என்பதன் எதிர்ச்சொல் __________

அவன் தன் ___________ வழியனுப்பி வைத்தான்.

(10 புள்ளிகள்)

5. பின்வரும் வசனங்களை ஒரு வசனமாக்கி எழுதுக.
உ.ம்: நான் படித்தேன். அவன் படித்தான். - நானும் அவனும் படித்தோம்

பூனை ஓடியது. நாய் குரைத்தது.

அவள் ஆடினாள். அவர்கள் பாடினார்கள்.

மரம் கீழே விழுந்தது. மரத்தின் கிளைகள் முறிந்தன.

ராமன் பந்து எறிந்தான். ரவி பந்தைப் பிடித்தான்.

மாணவன் பாடத்தை வாசித்தான். ஆசிரியர் அதைக் கேட்டார்.

(10 புள்ளிகள்)

6. பின்வரும் படத்தை பார்த்து அதிலிருந்து உமக்கு விளங்கிய கதையை எழுதுக. சில சொற்குறிப்புகள் உதவிக்கு தரப்பட்டுள்ளன.



நண்பர்கள் - காட்டுக்குள் - வெகுதூரம் - கரடி - மரத்தின்மீது - இறந்தவன் போல - ஆடாமல்அசையால் - பாய்ந்து - முகர்ந்து -

(10 புள்ளிகள்)

7. இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள். இந்நாளை எவ்வாறு கழித்தீர் என எழுதுக. (60 - 70 சொற்கள்)

(10 புள்ளிகள்)